# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 45 — 1973 පෙබරවාරි 02 වැනි සිකුරාදා— 1973.02.02

45 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 67 |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்கள் | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் | 67 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 71 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 72 |
| விலைக்கட்டளைகள் | 73 |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 84 |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் | — |


**கவனிக்க.** — குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலமும் கைத்தொழிற் பிணக்குகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலமும் 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 26 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 35

எண். டி. 22/ஆர்.ஈ.சி.ரி./231.

**இலங்கை கடற்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்**

இலங்கைக் கடற்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த கீழ்க்குறிப்பிடப் பட்ட அலுவலர் 1973, பெப்புருவரி 01 ஆம் திகதியிலிருந்து அரசாணை யமர்வு துறத்தலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சேர்ஜன் லெப்ரினன்ற் ஜே. சி. பர்ணாந்து, எஸ். எல். என்.

அதி உத்தமரின் ஆணைப்படி,

வி. ரி. ஜெயசிங்க,
செயலாளர்,
பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1973 ம் ஆண்டு சனவரி மீ 23 ம் உ.

2–136

## நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 36

**அரசியலமைப்பின் 126 (5) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையால் தமக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளரினால் செய்யப்பட்ட பதில் நியமனங்கள்**

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஐ. எம். இஸ்மாயில் | பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, காலி, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1972 நவம்பர் 24 லிருந்து | காலி மாவட்ட நீதிமன்ற 3165 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப் பளிப்பதற்கு |
| திரு. சி. ஆனந்த பிரேரோ | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1972 டிசம்பர் 27 லிருந்து | கொழும்பு கூட்டு நீதிமன்ற 54187 49355, 54019, 54442 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பத்தி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எல். எச். த அல்விஸ் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கொழும்பு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஜனவரி 19 லிருந்து | கொழும்பு மாவட்ட நீதிமன்ற 12107/பி இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எஸ். ஜோகனுதன் .. | மட்டக்களப்பு பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கல்முனை, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக- | 1972 டிசம்பர் 21 லிருந்து | கல்முனை நீதிமன்ற 46090 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஆர். பரமகுரு .. .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 பெப்ருவரி 8 லிருந்து | யாழ்ப்பாணம் விண்ணப்ப நீதிமன்ற சி ஆர் 4968எ இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் .. | பதில் இணை நீதிவான் முதலியன, பருத்தித்துறை, அவர்து ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 ஜனவரி 6 லிருந்து | பருத்தித்துறை நிதிமன்ற 6073 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை நீதவான் முதலியன, சிலாபம் | 1972 நவம்பர் 3 லிருந்து 6, 29, டிசம்பர் 29 லிருந்து 31 | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம் | 1972 டிசம்பர் 14 லிருந்து 16 | திரு. கே. சி. ஈ. த அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஈ. செனிவிரட்ண .. | பதில் இணை நீதவான் முதலியன இரத்தினபுரி | 1972 டிசம்பர் 15 லிருந்து 20 | திரு. ஆர். இளயபெருமா இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஈ. எஸ். விக்ரமரட்ண .. | கொழும்பு பதில் இணை நீதிவான் முதலியன, கோமகம | 1972 டிசம்பர் 21 .. | திரு. சி. அமெரசிங்க இல்லாத காலம் |
| திரு. எல். டபிள்யு. பெர்னுன்டோ .. | கண்டி பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, கம்பளை | 1972 டிசம்பர் 7 லிருந்து 9 | திரு. ஆர். எல். த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. டி. சி. த சில்வா .. .. | பதில் இணை நீதவான் முதலியன, பாணந்துறை | 1972 டிசம்பர் 15, 16 | திரு. ஜி. ஜி. டி. த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். பி. சங்கக்கார .. | அனுராதபுரம் பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பொலனறுவை .. | 1972 டிசம்பர் 14 லிருந்து 20 | திரு. டபிள்யு. என். எஸ். விஜரட்ண, இல்லாத காலங்கள் |
| திரு. கே. டி. விமலதாச .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 21 லிருந்து 27 | ஷை |
| திரு. என். எம். ஹலால்தீன் .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 28 லிருந்து 31 | ஷை |
| திரு. டபிள்யு. ஈ. பெரேரா .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கம்பக .. .. | 1972 டிசம்பர் 15, 16.. | திரு. எஸ். டி. ஜயசுந்தர, திரு.எம்.ஜமீல் இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஏ. குணரட்ண .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, களுத்துறை .. .. | ஷை .. | திரு. பி. ஈ. த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. பீலிக்ஸ் என். ஜயரட்ண .. | கொழும்பு பதில் இணை சிறுவர் நீதவான், பம்பலப்பிட்டியில் .. .. | ஷை .. | திரு. எம். சற். ஐ. அசீஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். கனகரட்ணம் .. .. | பதில் இணை நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் .. .. | ஷை .. | திரு. சி. ஈ. மென்டிஸ் இல்லாத காலம் |
| திரு. பி. எச். செனிவிரட்ண .. | பதில் இணை நீதவான் முதலியன, கேகாலை | 1972 டிசம்பர் 18 லிருந்து 21,26, 27 | திரு. எம். பி. விஜசிங்க இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். சுரவீர .. .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 14 லிருந்து 17,22 லிருந்து 25 | ஷை |
| திரு. எச். ஈ. விஜதுங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு | 1972 டிசம்பர் 15,16 | திரு. எஸ். பி. டபிள்யு. சிறிவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. உவால்டர் பெரேரா .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 26 லிருந்து 30 .. | ஷை |
| திரு. ஓ. எல். எம். இஸ்மாயில் .. | பதில் இணை மாவட்ட நிதிபதி முதலியன, திருகோணமலை .. .. | 1972 டிசம்பர் 28 லிருந்து 31 .. | திரு. ஏ. சைமன் சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எம். அபூதாஹிர் .. | பதில் இணை நீதவான் முதலியன, புத்தளம் | 1972 டிசம்பர் 18 லிருந்து 20 | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலங்கள் |
| திரு. உவால்ரர் டி. பெரெரா .. | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு | 1972 டிசம்பர் 15,16 .. | திரு. ஆர். நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. டி. சேரசிங்க .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, தங்காலை .. .. | 1972 டிசம்பர் 19 .. | திரு. ரி. என். அபேவீர இல்லாத காலம் |
| திரு. பி. மகேஸ்வரன் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலிய .. .. | 1972 டிசம்பர் 12 லிருந்து 16 .. | திரு. எம். பி. ஜி. திசனுயக்க இல்லாத கால்ங்கள் |
| திரு எஸ் . ஏ. யற்றவர .. | கண்டி பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, மாத்தளை .. .. | 1972 டிசம்பர் 14 லிருந்து 16 .. | திரு. எவ். ஜி. பி. பெர்னுன்டோ இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. பி. டபிள்யு. அபேசூரிய , .. | பதில் இணை நீதவான் முதலியன, மாத்தறை | 1972 டிசம்பர் 28 லிருந்து 31 .. | திரு. ஏ. எஸ். விஜதுங்க இல்லாத காலங்கள் |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எச். டபிள்யு. குணசேகர .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 11 விருந்து 16 | திரு. ந. எஸ். விஜதுங்க இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. ஏ. எல். குணரட்ண .. | பதில் இணை நீதவான் முதலியன, கம்பக .. | 1972 டிசம்பர் 15,16 | திரு. டி. சி. டபிள்யு. விக்ரமசேகர இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். விக்ரமசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, காலி .. | 1972 டிசம்பர் 28 விருந்து 31 | திரு. ஜே. சேனுதிருஜா இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஈ. வீரசூரிய .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 26, 27 | ஷை |
| திரு. ஈ. ஏ. ஜே. டபிள்யு. சேரசிங்க .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 23 விருந்து 25 | ஷை |
| திரு. ரி. ஏ. கீர்த்திநந்த .. | கொழும்பு பதில் இணை நீதவான் முதலியன, நாரகென்பிட்டி .. .. | 1972 டிசம்பர் 15,16,29 | திரு. வை. எச். குணரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. ஈ. எம். முத்துக்கிருஸ்ணு .. | ஷை .. | 1972 டிசம்பர் 30 .. | ஷை |
| திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் .. .. | 1972 டிசம்பர் 15,16.. | திரு. ஜே. ஜீ. ஆசீர்வாதம் இல்லாத காலங்கள் |
| திரு. குயின்ரின் பெரேரா .. | பதில் இணை விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு .. | ஷை .. | திரு. ஈ. ஏ. விஜகுலசூரிய இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஞானச்சந்திரன் .. | பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை .. .. | 1972 டிசம்பர் 8,9,15 | திரு. ரி. ஜே. ருஜரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஞானச்சந்திரன் .. | பதில் இணை நீதவான் முதலியன, பருத்தித்துறை .. | 1972 நவம்பர் 22, டிசம்பர் 15 விருந்து 21 | திரு. எஸ். ஜோகனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ரட்ணசிங்கம் .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 6 விருந்து 10 | ஷை |
| திரு. எஸ். ஆர். பி. ஏ. குணதிலக்க | பதில் இணை நீதவான் முதலியன, களுத்துறை .. .. | 1972 டிசம்பர் 8 .. | திரு. எல். எம். ஜயரட்ண இல்லாத காலம் |
| திரு. கே. நவரட்ணருஜா .. | பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, மட்டக்களப்பு .. .. | 1972 டிசம்பர் 14 விருந்து 18 .. | திரு. எம். சண்முகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. ரி. கருணைரட்ணம் .. | மட்டக்களப்பு பதில் இணைமாவட்ட நீதிபதி முதலியன, கல்முனை .. | 1972 நவம்பர் 15 விருந்து 18 .. | திரு. கே. பாலகிட்ணர் இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. எம். சமுசுதீன் .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 14 விருந்து 19 | ஷை |
| திரு. ஏ. அழகையா .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 20 விருந்து 23 | ஷை |
| திரு. எச். ஈ. வீரசூரிய .. | பதில் இணை நீதவான் முதலியன, காலி .. | 1972 டிசம்பர் 15, 16.. | திரு. எல். எச். ஜீ. வீரசேகர இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். விக்ரமசிங்க | ஷை .. .. | 1972 டிசம்பர் 21 .. | ஷை |
| திரு. ஈ. ஏ. ஜே. டபிள்யு. சேரசிங்க .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 28 விருந்து 30 | ஷை |
| திரு. எஸ். ஆர். பி. ஏ. குணதிலக்க | பதில் இணை நீதவான் முதலியன, களுத்துறை .. .. | 1973 ஜனவரி 6 .. | மத்துகம நீதிமன்ற 22512 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ரி. குணரட்ண .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பாணந்துறை .. .. | 1973 பெப்ருவரி 3 .. | பாணந்துறை மாவட்ட நீதிமன்ற 9021 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. டி. பி. பி. மகாடியுள்வேவ .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, அனுராதபுரம் .. .. | 1972 டிசம்பர் 26 .. | அனுராதபுரம் நீதிமன்ற 43775/பி இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. விஜயரட்ணம் .. | நுவரேலிய பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, அட்டன் .. | 1972 டிசம்பர் 23 விருந்து 26 .. | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. என். எஸ். சி. அழகமுத்து .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 30 விருந்து 1973 ஜனவரி 2 | ஷை |
| திரு. எல். எஸ். வி. பெரெரா .. | பதில் இணை நீதவான் முதலியன, பதுளை .. | 1972 டிசம்பர் 7 .. | திரு. எஸ். ஜே. டி. த எஸ். விஜயரட்ண இல்லாத காலம் |
| திரு. எல். ஜி. ககற்றப்பிற்றிய .. | பதில் இணை நீதவான் முதலியன, களுத்துறை | 1972 டிசம்பர் 6, 7 .. | திரு. சி. மனோகரா இல்லாத காலங்கள் |
| திரு. எச். பீட் பெரெரா .. | பதில் இணை நீதவான் முதலியன, குருணுகல் | 1972 டிசம்பர் 27 .. | திரு. எம். எஸ். எஸ். கொரிய இல்லாத காலம் |
| திரு. டபிள்யு. ஜே. பொன்சேக .. | பதில் இணை நீதவான் முதலியன, பாணந்துறை | 1973 ஜனவரி 3 விருந்து 5 | திரு. பி. பி. ரம்புக்வெல்ல இல்லாத காலங்கள் |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற் படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ரி. தம்பிரட்ணம் .. | யாழ்ப்பாணம் பதில் இணை நீதவான் முதலியன, மல்லாகம் | 1972 டிசம்பர் 28 லிருந்து 31 | திரு. ரி. சுந்தரலிங்கம் இல்லாத காலம் |
| திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன .. | பாணந்துறை பதில் இணை நீதவான் முதலியன, கொறண | ஷை .. | திரு. டபிள்யு. ஜி. என். வீரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஜே. அந்தணி பெர்ஞன்டோ | பதில் இணை நீதவான் முதலியன, பாணந்துறை | 1972 டிசம்பர் 30, 31.. | திரு. ஜி. ஜி. டி. த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எச். டி. உபாலி .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 28, 29.. | ஷை |
| திரு. பி. ஈ. வி. பொட்டேஜு .. | கொழும்பு பதில் இணை நீதவான் முதலியன, கோமகம | 1972 டிசம்பர் 29 .. | திரு. சி. அமெரசிங்க இல்லாத காலம் |
| திரு. டி. ஏ. இத்தமல்கொட .. | பதில் இணை நீதவான் முதலியன, அவிசாவளை | 1972 டிசம்பர் 28 லிருந்து 30 | திரு. கே. விக்னரூஜா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். மாதவரூஜா .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, திருகோணமலை | 1973 ஜனவரி 3 லிருந்து 7 | ஷை |
| திரு. எஸ். டி. இரத்னாயக்க .. | பதில் இணை நீதவான் முதலியன, பதுளை .. | 1972 டிசம்பர் 12, 13, 29, 31 | திரு. எஸ். ஜே. டி. த எஸ். விஜயரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. எஸ். எம். ரஜீன் .. | பதில் இணை நீதவான் முதலியன, அம்பாந்தோட்டை | 1972 டிசம்பர் 29, 1973 ஜனவரி 3 | திரு. எச். டபிள்யு. சேனநாயக்க லாத காலங்கள் |
| திரு. எச். எம். எஸ். பி. மாதவெல .. | மாத்தளை தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் இணைத் தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1972 டிசம்பர் 30 லிருந்து 15 தினங்கள் | வாரியப்பொல ஊர்நீதிமன்ற 2890 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஏ. சி. ஜபார் .. | கரவக்குப்பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 14 .. | திரு. கே. நாகலிங்கம் இல்லாத காலம் |
| திரு ஏ. சி. ஜபார் .. | பாணமைப்பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 27, 28 | திரு. எஸ். ரூஜனுதன் இல்லாத காலங்கள் |
| செல்வி ஐ. எம். வீரரட்ண .. | கடவத்தக்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 டிசம்பர் 21 லிருந்து 23, 26 லிருந்து 28 | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க .. | தும்பனே முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 21 .. | திரு. சி. பி. குனுகும்புர இல்லாத காலங்கள் |
| திரு. எல். பி. கரளியத்த .. | ஷை .. .. | 1972 ஒக்டோபர் 30, 31, நவம்பர் 27 | ஷை |
| திரு. ஏ. சிமாம்பிள்ளை .. | மன்னூர் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் .. | 1972 நவம்பர் 18, 29, 30 | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. எம். கே. செல்வரூஜா .. | கட்டுக்குளம் பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1972 ஒக்டோபர் 30, நவம்பர் 2, 3, டிசம்பர் 4 லிருந்து 6, 8 | திரு. ஐ. சிருபாகரன் இல்லாத காலங்கள் |
| திரு. நிசங்க உடகம .. | கல்போடக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 டிசம்பர் 14, 18.. | திரு. ஏ. பி. அநுவிகார இல்லாத காலங்கள் |
| திரு. திஸ்ஸ ரணவீர .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 19 .. | ஷை |
| திரு. ரி. பி. தெலசிங்க .. | வவுடவிலி அற்பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 25 .. | திரு. டி. பி. எல்லப்போல இல்லாத காலம் |
| திரு. ஜே. எச். ஆரியரட்ண .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 16 .. | ஷை |
| திரு. ஜி. சூரிய ஆராச்சி .. | ஷை .. .. | 1972 நவம்பர் 11, 12 | ஷை |
| திரு. எச். எம். குணசேகர .. | மாகம்பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 6, 7, 27, 28 | திருமதி பி. எஸ். ராமச்சந்திரா இல்லாத காலங்கள் |
| திரு. பி. எம். பற்றபந்தி .. | ஷை .. .. | 1972 நவம்பர் 29 லிருந்து டிசம்பர் 2 | ஷை |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | தேவமெதி அற்பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 டிசம்பர் 16 .. | திரு. சி. ஏ. எஸ். ஈ. கிறிஸ்பின் இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | கல்கமுவ முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 10, 18, 21 | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. ரி. பி. தெலசிங்க .. | ஷை .. .. | 1972 டிசம்பர் 16, 18.. | ஷை |
| திரு. டபிள்யு. சிவஞானம் .. | குளியாப்பிட்டி முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1972 நவம்பர் 9 .. | திரு. எஸ். கடவத்த ஆராச்சி இல்லாத காலம் |
| திரு. ஈ. எஸ். இயலகம .. | ஷை .. .. | 1972 நவம்பர் 10 .. | ஷை |

நீதிச்சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச்சபைகள் அலுவலகம்,
த. பெ. 573,
9/52, கெப்பிட்டிப்போல வீதி,
கொழும்பு 5,
26, ஜனவரி 1973.

எல். சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை.

2–186/1

1973 இன். இல. 37

**நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையினால் செய்யப்பட்ட இடமாற்றங்கள்**

| அலுவலர் பெயர் | புதிய இடம் | இடமாற்றம் செயற் படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ரி. ஜே. ருஜரட்ணம் .. | பதில் மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் .. | 1973 ஜனவரி 1 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. கே. பாலசிட்ணர் .. | பதில் மாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை .. | 1973 ஜனவரி 1 லிருந்து பெப்ருவரி 28 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. எல். எச். ஜி. வீரசேகர .. | நீதவான் முதலியன, சிலாபம் .. .. | 1973 ஜனவரி 1 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. எஸ். சேமசிங்க .. .. | நீதவான் முதலியன, நீர்கொழும்பு .. | டிை .. | டிை |
| திரு. எல். எஸ். பெரெரா .. | இணை நீதவான் முதலியன, கொழும்பு, நாரகென் பிட்டி போக்குவரத்துமன்று | டிை .. | டிை |
| திரு. ஏ. சைமன்சில்வா .. | நீதவான் முதலியன, களுத்துறை .. | டிை .. | டிை |
| திரு. வை. எச். குணரட்ண .. | அதிகப்படியான அலுவலர் .. .. | டிை .. | டிை |
| திரு. கே. விக்னருஜா .. .. | மாவட்ட நீதிபதி முதலியன, திருகோணமலை .. | டிை .. | டிை |
| திரு. எஸ். பி. குணவர்த்தன .. | கொழும்பு இணைநீதவான் முதலியன, கோமகம .. | டிை .. | டிை |
| திரு. ஜி. ஜி. டி. த சில்வா .. | நீதவான் முதலியன, அவிசாவளை .. | டிை .. | டிை |
| திரு. ஏ. எஸ். விஜதுங்க .. | இணை நீதவான் முதலியன, காலி .. | டிை .. | டிை |
| திரு. சி. அமெரசிங்க .. .. | நீதவான் முதலியன, பதுளை .. .. | டிை .. | டிை |
| திரு. எஸ். ஜே. டி. த எஸ். விஜயரட்ண .. | நீதவான் முதலியன, மாத்தறை .. | டிை .. | டிை |
| திரு. பி. பி. ரம்புக்வெல்ல .. | நீதவான் முதலியன, பாணந்துறை .. | டிை .. | டிை |
| திரு. சி. மனோகரா .. .. | கொழும்பு இணை நீதவான் முதலியன, கொழும்புக் கோட்டை கூட்டு நீதிமன்றம் | டிை .. | டிை |

*நீதிச்சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச் சபைகள் அலுவலகம்,*
*த. பெ. 573, கொழும்பு 5,*
**26 ஜனவரி, 1973.**

எல். சமரதுங்க,
செயலாளர்,
*நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை.*

**2–186/2**

---

**1973 இன் இல. 38**

*அதிகப்படியான அலுவலரொருவரான திரு. எம். எச். பி. மொரைஸ் நியமனம் 1973 ஜனவரி 1 லிருந்து நிறுத்தப்பட்டுள்ளது.*

*நீதிச்சேவைகள் ஆலோசனை ஒழுக்காற்றுச் சபைகள் அலுவலகம்,*
*த. பெ. 573, கொழும்பு 5,*
**26, ஜனவரி, 1973.**

எல். சமரதுங்க,
செயலாளர்,
*நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை.*

**2–186/3**

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

**1973 இன். இல. 39**

எண் : டி. 252/ஆர்.ஈ.சி.ரி./1.

**இலங்கை வான் படை—பதவியேற்றங்கள்**

1972, ஒகத்து 1 ஆம் திகதியிலிருந்து பிளையிங் ஒபிசர்கள் ஆகக் கடவர் :

பயிலற் ஒபிசர் ஜயசிங்உற ஆரச்சிகே குலரத்ன (01167)—நிர்வாக/உபகரணம்.
பயிலற் ஒபிசர் சாந்தி உப்பாலி மெண்டிஸ் (01168)—தொழில்நுட்ப/பொறிவலாளர்.
பயிலற் ஒபிசர் ஏர்ணெஸ்ற் விஜயகுமார் தென்னக்கோன் (01169)—நிர்வாக/உபகரணம்.
பயிலற் ஒபிசர் சாணக்க ஃபிறெட்றிக் குணத்திலக்க (01170)—நிர்வாக/உபகரணம்.
பயிலற் ஒபிசர் ரஞ்ஜன் பிரபாத் சமரசிங்உற (01171)—தொழில்நுட்ப/பொறிவலாளர்.
பயிலற் ஒபிசர் வன்னக்குவத்த வடுகே டக்லஸ் கிறிரோஃபர் வின்சென்ற் பெரேரா (01172)—எ.எஃப்.சி.
பயிலற் ஒபிசர் மொஹமெட் சத்தீக் சாலி (01173)—ஜி.டி/பி.
பயிலற் ஒபிசர் குருகுலசூரிய கிறெகறி அன்செல்ம் பீரிஸ் (01174)—ஜி.டி./பி.
பயிலற் ஒபிசர் ஒலிவர் மத்தியூ ரணசிங்உற (01175)—ஜி.டி./பி.

1972, ஒற்ரோபர் 1 ஆம் திகதியிலிருந்து பிளையிங் ஒபிசர் ஆகக கடவர் :

பயிலற் ஒபிசர் சிசில் ஃபிரான்சிஸ் மாறம்பே (01177)—ஜி.டி./பி.
பயிலற் ஒபிசர் துவான் மொஹமெட் ஸக்காரியா மேல் (01178)—ஜி.டி./பி.
பயிலற் ஒபிசர் மொஹமெட் உஹுஸெய்னுல் ஃவாஹீர் வஹாப் (01179)—ஜி.டி./பி.

அதி உத்தமரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்உற,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 27 ந் வ.

**2–204**

**1973 இன் இல. 40**

எண் : டி. 252/ஆர். ஈ. சி. ரி./1.

**இலங்கை வான் படை—பதவியேற்றங்கள்**

**1972, திசெம்பர் 15 ஆம் திகதியிலிருந்து ஃபிளையிங் ஒபிசர்கள் ஆகக் கடவர் :—**

பைலற் ஒபிசர் சுதர்ஷன் மனம்பேரி—(01180)—ஜி. டி./பி.
பைலற் ஒபிசர் மோஹன் ஒலிவர் குணரத்ன—(01181)—ஜி. டி./பி.
பைலற் ஒபிசர் விதானகே பிரேமலால் ஆனந்த ஜயசிங்ஹ—(01182)—ஜி. டி./பி.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 25 ந் வ.

**2–203**

---

**1973 இன் இல. 41**

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

அச்சுவேலி, நவற்கிரி வீதியில் வசிக்கும் வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் யாழ்ப்பாண நீதிபரிபாலன ஆதிக்கத்துள் ஆங்கில, தமிழ் பாஷைகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 24 ந் வ.

**2–5**

1973 இன். இல. 42

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

இலக்கம் 169, தேவாலேகாவ இரத்தினபுரியில் வசிக்கும் மத்துமாகே லெயாறிஸ் குணரத்ன அவர்கள் நிவித்திகல வசிப்பிடத்திலும் அலுவல கத்திலும் இடம்கொட மேலதிக அலுவலகத்திலும் இரத்தினபுரி நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத் தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்நாட்டு, உள்ளூராட்சி அலுவ ல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1972 ம் ஆடு திசெம்பர் மீ 24 ந் வ.

2–117

---

## அரசாங்க அறிவித்தல்கள்

எண். பி.ஆர்./ஏ.சி./எஸ்./27/1.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரானவர் கொழும்பில் கிரீஸ் நாட்டின் கௌரவ காவற்றூதராகத் திரு. இயூஆன் வெறெய்ல் வியூக்கஸ் தஃபொன்சேக்கா அவர்களை ஒப்பாசாரமாகக் கணித்தலில் களிகூர்ந் துள்ளார்.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1.
1973 ம் ஆடு சனவரி மீ 12 ந் வ.

2–134

---

எல்.டி—பி. 7/63

**1963 ம் ஆண்டின் 4 ம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான் " உவெஸ்லி கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின், கொழும்பு உவெஸ்லிக் கல்லூரியின் நூற்றாண்டு நிதியை " அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறி வித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆடு ஜனவரி மீ 24 ந் வ.

2–166

---

எல். டி.—பி. 16/71

**1969 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைப் புகைவண்டிக் காவலர்களினதும் நீராவி இயந்திர எஞ்சின் தொழிலாளர்களினதும் சகாயச்சங்கம் (இணைத்தல்)**

1969 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைப் புகைவண்டிக் காவலர்களினதும் நீராவி யந்திர எஞ்சின் தொழிலாளர்களினதும் சகாயச்சங்கம் (இணைத்தல்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் புகை வண்டிக் காவலர்களினதும் நீராவி யந்திர எஞ்சின் தொழிலாளர் களினதும் சகாயச் சங்கத்தினல் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினல் தமக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு நிதியமைச்சரினல் உறுதிப்படுத்தப்பட்ட விதி.

சீ. ஏ. குறே,
செயலாளர்,
நிதியமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆடு ஜனவரி மீ 14 ந் வ.

**விதி**

இலங்கைப் புகைவண்டிக் காவலர்களினதும் நீராவி யந்திர எஞ்சின் தொழிலாளர்களினதும் சகாயச்சங்கத்தினல் ஆக்கப்பட்டவையும், அச் சட்டத்தின் 8 (4) ஆம் பிரிவின் பயனைக் கொண்டு இலங்கைப் புகைவண்டிக்காவலர்களினதும் நீராவி யந்திர எஞ்சின் தொழிலாளர் களினதும் சகாயச்சங்கம் (இணைத்தல்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்பட்டவையுமான விதிகள், பின்வருமாறு மேலுந் திருத்தப்படுகின்றன :

(1) அத்தியாயம் 2 இன் கீழ்—

(அ) விதி 1 (அ) வில் " ரூபா 5 " என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக " ரூபா 10 " என்ற சொல்லமைப்பினை இடுவதன் மூலமும் ;

(ஆ) 2 ஆம் விதியின் (இ), (ஈ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :—

" (இ) ஓராண்டுக்குக் குறையாதவொரு காலத்துக்கு இவ் விதிகளுக்கிணங்கக் கூட்டுத்தாபனத்தின் நிதிகளுக்கு ஒழுங்காக உதவுதொகை வழங்கியுள்ள கூட்டுத்தாபனத் தின் உறுப்பினரெவரேனும் அரசசேவையிலிருந்து ஓய்வுபெறுவதன்மேல், பின்வரும் முறையிற் கணிக்கப் பட்ட நன்கொடையொன்று, (அ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுடன் கூடுதலாக அத்தகைய உறுப்பினர்க்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்,

1. ஓய்வூபெறும் தேதிவரை கொடுக்கப்பட்ட மொத்த நன்கொடை ; அத்துடன்

2. அத்தகைய உறுப்பினரினல் கொடுக்கப்பட்ட மொத்த நன்கொடைகள் எல்லாவற்றினதும் நூற்றுவீதம் சங்கத்தில் அவரது உறுப்பாண்மைக்காலத்தை இரட்டித்து 100 இனல் பிரிப்பதன் மூலம் நூற்று வீதமானது கணிக்கப்படுதல் வேண்டும். அதாவது $\frac{\text{ந.} \times 2 \text{ கா.}}{100}$ ந. என்பது நன்கொடையாகக் கொடுக்கப் பட்ட தொகையைக் குறிக்கும். கா. என்பது உறுப்பாண்மைக் காலத்தைக் குறிக்கும்.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரேனும் இறப்பதன் மேல் அல்லது கடமையின்போது ஏற்பட்ட விபத்தொன் றன் விளைவாக உறுப்பினரெவரேனும் சேவையிலிருந்து ஓய்வூபெறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய உறுப்பினர் சங்கத்தில் ஓராண்டுக்கால உறுப்பாண்மையைப் பூர்த்தி செய்திருப்பின், அவருக்கு அல்லது அவரது குடும்பத்துக்கு 3,000/- ரூபாக் கொண்ட நன்கொடையொன்று கொடுக்கப் படுதல் வேண்டும்."

(இ) 3 ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விதியை இடுவதன் மூலமும் :—

" 3. ஐந்து ரூபாக் கொண்ட பன்னிரண்டு மாதங்களிற் செலுத்தப்பட வேண்டிய தவணைப்பணங்களாக, ஆண் டொன்றுக்கு 60/- ரூபாக் கொண்ட நன்கொடைக் கோரிக்கையொன்று, அத்தகைய கோரிக்கைகளுக்கு ஆளாகின்ற உறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்தும் அற விடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அறவிடப் பட்ட தொகை, விதி 2 (இ), (ஈ) என்பனவற்றின் கீழ்க் கொடுக்கப்பட்ட நன்கொடைகளைச் சரிசெய்ய வேண்டிய நன்கொடை ஒதுக்கு நிதிக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்."

(ஈ) 7 ஆம் விதியின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

" (அ) தலைவர் அல்லது அவர் இல்லாதபோது அதன் கூட்டுச் செயலாளரும் பொருளாளரும், முகாமைக்குழுவினற் பின்னர்க் கொடுக்கப்படும் அங்கீகாரத்துக்கமைய, உறுப் பினர்களுள் 3/4 பங்கினரின் உதவுதொகைகளைக் கொண்ட கடனென்றை வழங்குதல் அவர்களுக்குத் தகுதிவாய்ந் ததாதல் வேண்டும் ; ஆயின், எந்நேரத்திலும் நிலுவையாயுள்ள கடனது, கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களில் அவரது வரவிலிருக்கும் தொகையின் 3/4 பங்கிற்கு மேற்படுதலாகாது." ; அத்துடன்

(உ) 8 ஆம் விதியின் (1) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :

" (1) ஓய்வூதியம் பெறுதற்குரிய பணியாட்டொகுதி—

(அ) தலைவர் அல்லது அவர் இல்லாதபோது கூட்டுச் செயலாளரும் பொருளாளரும், முகாமைக்குழுவின் அங்கீகாரத்துக்கமைய, சுகவீனம் அல்லது இடர் ஏற்படும் நேரங்களில் நிவாரணம் அளிக்கும் நோக்கத் துக்காக அல்லது பணக்கஷ்டங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு உதவிபுரியும் நோக்கத்துக்காக பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டவாறான வீதங்களுக் கிணங்கக் கடனென்றை வழங்குதல் அவர்களுக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும் ; ஆயின், எந்நேரத் திலும் நிலுவையாயுள்ள கடனது, அத்தொகைக்கு மேற்படுதலாகாது.".

2–39

**அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்**

(190 ம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 45 (1) ம் பிரிவின் காப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் செல்லையா குமாரசூரியர் ஆகிய நான், நிதியமைச்சரின் சம்மதத்துடன் உள்ளூர், இந்தியத் தந்திக் காசுக்கட்டளைகளுக்கு தற்பொழுது அறவிடப்படும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணமாகிய 10 சதம் 1973 பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 25 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

செ. குமாரசூரியர்,
அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர்.

1973 ம் ஆண்டு சனவரி மீ 20 ந் உ.

2–57

---

எல். டி. பி.—7/63

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்**

16 அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான் " ஸ்ரீ லங்கா வைத்திய நூலகத்தை " அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 15 ந் உ.

2–49

---

எல்.டி.—பி. 79/49.

**உணவு, மருந்துகள் சட்டம்**

(216 ஆம் அத்தியாயமான) உணவு, மருந்துகள் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், யாழ்ப்பாண மாநகரசபை நிருவாக இடப்பரப்பிற்கு அரசாங்கப் பகுப்பாளரொருவராகத் திரு. பீ. தர்மலிங்கம் அவர்களைச் சுகாதார அமைச்சர் அங்கீகரித்துள்ளாரென அப்பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 26 ந் உ.

2–159

---

**இலங்கை கமத்தொழில் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனம்**

கமத்தொழில் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபன சேமநிதி விதிகள்

1956 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட சட்டத் தொகுப்பின் 402 ஆம் அத்தியாயமான கமத்தொழில் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 51 (1) (கே) என்னும் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட சேமநிதி விதிகள் 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி 9,920 ஆம் இலக்கங் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட்டதுமான விதிகளில் இதனகத்து அட்டவணையில் சொல்லிய வண்ணம் மேற்கூறிய கூட்டுத்தாபன முகாமைச்சபை தொழில் ஆணையாளரின் அனுமதியுடன் மீண்டும் திருத்தம் செய்துள்ளதென்றும் மேற் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 86 (2) இல் கூறியபடி நிதி மந்திரி அங்கீகாரமளித்துள்ளாரென்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

எச். ஆர். த சொய்சா,
நிதி அமைச்சின் செயலாளருக்காக.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 23 ந் உ.

**அட்டவணை**

| விதி இலக்கம் | எவ்விதம் திருத்தம் செய்யப்பட்டது |
|---|---|
| 11 .. | இவ்விதியை முற்றாக நீக்கிவிட்டு அவ்விடத்திற்குக் கீழ்க் காணும் புதிய விதியைப் புகுத்த வேண்டியது<br>"11. **நியமனம் செய்தல்.**—ஒரு அங்கத்தவர் தான் மரித்த பின் சேம நிதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எந்நேரத்திலாயினும் ஒருவரை அல்லது பலரை உரித்தாளராக நியமனம் செய்யலாம். அவ்வண்ணம் நியமிக்கப்படுபவர் அவரது குடும்பத்திலுள்ளவராயிருத்தல் வேண்டும்—உதாரணமாக—மனைவி, பிள்ளை அல்லது பிள்ளைகள், பெற்றோர் அல்லது பெற்றோர்கள், சகோதரன் அல்லது சகோதரி ஆக இருத்தல் வேண்டும். எந்த நேரத்திலாயினும் குறித்த அங்கத்தவர் முன் செய்த நியமனங்களை மாற்றவும் அழிக்கவும் உரித்துடையராவர். எது எப்படி இருப்பினும் குறித்த அங்கத்தவர் திருமணம் செய்தவுடன் அவரால் முன்பு நியமனம் செய்யப்பட்ட யாவும் ரத்தாகிவிடும்." |

2–165

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. கே.யு./75/73. **பாண்**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

173 ம் அத்தியாயமான 3 (2) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் குருநாகல் மாவட்ட உதவி விலைகட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு சதர சிங்ககே டொன் சுகததாஸ ஆகிய நான் :—

(1) 1967 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் திகதி 14,776/10 இலக்க இலங்கை அரசாங்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கே.யு/70/67 ம் இலக்கம் கொண்ட 1967 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் திகதி இடப்பட்டதுமாகிய எனது உணவுக்கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) 8 அவுன்சுக்கு மேலான நிறையை கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணின் பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் பாணுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையின் சராசரி விலையில் கணக்கிடப்பட வேண்டுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்சுக்குக் கூடாத நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது, 8 அவுன்ஸ் நிறையைக் கொண்ட பாணின் விலையின்படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக அவ்விடப்பரப்பில் விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.'

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்யையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் பாணைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருப்பவர் அவ்விடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள பாணின் ஆகக்கூடிய விலையைக்குறிக்கும் விளம்பரம் ஒன்றை மக்களின் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்தில் அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—
(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பாணின் விபரம் ;
(இ) விற்ற பாணின் தொகையும் ;
(ஈ) விற்ற பாணிற்கு கொடுக்கப்பட்ட விலையும்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " அவுன்ஸ் " அல்லது " அவு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக்கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ந் திகதி காலை 10 மணிக்குக குருநாகல் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டி. சுகததாஸ,
உப உணவுக்கட்டுப்பாட்டதிகாரி,
குருநாகல் மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2.<br>8 அவுன்சுக்கு கூடுத லான நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 3.<br>8 அவுன்சுக்கும் அதற்கும் குறைந்த நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| (அ) குருநாகல் மாநகர சபை பகுதி | 0 40 (16 அவுன்சுக்கு) | 0 22 (8 அவுன்சக்கு) |
| (ஆ) குருநாகல் மாவட்ட நிர்வாக பகுதிகள் | 0 41 (16 அவுன்சுக்கு) | 0 22 (8 அவுன்சுக்கு) |

**குறிப்பு.**—இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறித்த விலைக்குத்தான் விற்கப்பட வேண்டுமென்று கருதப்படவில்லை ; இவைகள்தான் **ஆகக்கூடிய** விலையெனவும் இவற்றிற்குக் கூடுதலாக விற்கப்படக் கூடாதெனவும் கொள்ளப்படவேண்டும்.

2—99

---

உணவு விலைக் கட்டளை இல. பொ. ம. 3/72 பாண்

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பொலன்னறுவை மாவட்ட உப விலைக்கட்டுப் பாட்டு அதிகாரி (உணவு) சேர்லி றெஜினல்ட் வில்லியம் அமரசிங்க ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1967 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ம் திகதி வெளியான 14,776/13 ம் இலக்க அதிவிஷேச இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1967 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் திகதியைக் கொண்ட பொ. ம. 4/67 இல. உணவு விலை கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடு இருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே 1 ம் பந்தியில் குறிக்கப் பட்டிருக்கும் இடங்களில் முறையே 16 அவுன்ஸ் 8 அவுன்ஸ் நிறையுள்ள பாணை விற்க வேண்டிய ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட பாணையோ அல்லது 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து, 16 அவுன்சு பாணுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையின் சராசரி விலையின்படி கணக்கிடப்படல் வேண்டுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக 8 அவுன்சு நிறையை அல்லது 8 அவுன்சுக்கு கூடாத நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்துலாவது விற்குமிடத்து 8 அவுன்ஸ் நிறையைக் கொண்ட பாணின் விலைப்படி கணக்கிடப்பட்ட விலைக்கு கூடுதலாக விற்கக் கூடாதென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக, ஆகக்கூடிய விலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாண் விற்குமிடத்து, அதைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் உபயோகப்படின் அதன் விலையும் அடங்குமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வியாபாரியும் பாணை தம்வசத்தில், அல்லது தம் கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருப்பவர், அவ்விடத்து விதிக்கப் பட்டுள்ள பாணின் ஆகக்கூடிய விலையைக் குறிக்கும் விளம்பரம் ஒன்றை அவ்விடத்தில், அவ்வாகனத்தில் மக்கள் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவன வற்றைக் கொண்ட பற்றுச் சீட்டொன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பாண் அல்லது பாண்களின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகையையும் ;

(ஈ) விற்ற பாணுக்கு கொடுக்கப்பட்ட விலை.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " அவுன்ஸ் " அல்லது " அவு " என்பது அவோா்ட்போஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண அவுன்ஸ் முறையாகக் கருதப்படும்.

1973 ம் ஆண்டு தை மாதம் 19 ம் திகதி பி. ப. 1 மணிக்கு பொலன் னறுவை கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஆர். டபிள்யு. அமரசிங்க,
உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
பொலன்னறுவை மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>8 அவுன்சுக்கு கூடுத லான நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>8அவுன்சுக்கும் அதற்கும் குறைந்த நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| பொலன்னறுவை பரிபாலன மாவட்டம் | 0 42 (16 அவு.) | 0 21 (8 அவு.) |

2—8

---

பாண்

உணவுவிலைக் கட்டளை இல. மொன/டி/1/1973.

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 4 ம் பிரிவோடு 3 (2) பிரிவுகளினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் மொனருகலைமாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சந்திரரட்ன வியனாராச்சி ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1971 பெப்புருவரி 18 ந திகதியிடப்பட்ட 14,946/8 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1971 பெப்புருவரி 25 ந திகதிய மொன/டி/1/1971 ம் இலக்கங் கொண்ட எனது உணவு விலைக்கட்டளையை இப்போது தொடக்கம் நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே, 16 அவுன்ஸ், 8 அவுன்ஸ் நிறைகளிலுள்ள பாண்கள் விற்கப்படும் கூடுதலான விலைகளாக இருக்க வேண்டும் என்றும் இவ்விலைகளுக்கு அதிகமாக அட்டவணையில் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் விற்றல் ஆகாது என்றும் விதிக்கிறேன்.

(3) 8 அவுன்ஸ் அல்லது அதற்குக் கூடுதலான துண்டு பாண் விற்கப்படுமிடத்து, அதன் விலை, ஒரு இருத்தலுக்கு அப்பகுதிக் கெனக்கணிக்கப்பட்ட கூடுதலான விலையின் வீதப்பங்கின் படியேயன்றி கூடுதலான விலைக்கு விற்றலாகாது என்று ஆஞ்ஞை யிடுகிறேன்.

(4) 8 அவுன்சிற்கு குறைந்த அல்லது 8 அவுன்சிற்கு கூடிய துண்டு விற்கப்படுமிடத்து, அதன் விலை, அப்பகுதிக்கென 8 அவுன்ஸ் பாணிற்குக் கணிக்கப்பட்டிருக்கும் கூடுதலான விலையின் வீதப்பங் கின்படியேயன்றி கூடுதலான விலைக்கு எப்பகுதியிலேனும் விற்றலாகாது என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) பாண் விற்கப்படும்போது அதனைச் சுற்றிக்கொடுக்கப் பாவிக்கப்படும் பொருளின் விலையும் இதனால் விதிக்கப்பட்டிருக்கும் பாணின் ஆகக்கூடிய விலையுடன் அடங்கவேண்டும் என்றும் ஆஞ்ஞை யிடுகிறேன்.

(6) எந்தப் பகுதியிலேனும் பாண் வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வரும் வியாபாரம் செய்யும் நிலையத்தில் அப்பகுதிக்கென இதனால் விதிக்கப்பட்டிருக்கும் கூடுதலான விலையைக் குறிக்கும் ஓர் விளம்பரப் பலகை அல்லது விளம்பர அட்டை பார்வைக்காக வைக்கப்பட்டிருக்க வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) எப்பகுதியிலேனும் பாண் வியாபாரம் செய்பவர் வாங்குபவர் கேட்குமிடத்து அவருக்கு கீழ் வரும் விபரங்களுடன் ஒரு பற்றுச்சீட்டுக்கொடுக்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) கொடுக்கப்பட்ட பாணின் அளவு ;

(இ) எத்தனை துண்டுப் பாண்கள் கொடுக்கப்பட்டது என்றும் ;

(ஈ) விற்ற பாணிற்கு பற்றிக்கொண்ட தொகை.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " அவுன்ஸ் " என்பது நிறுத்தலளவையின் அவுன்சிற்கு சமமானதென ஆஞ்ஞையிடுகிறேன்.

1973 ஜனவரி 24 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு பொலன்னறுவைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

சந்திரரட்ன வியனாராச்சி,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
பொலன்னறுவை மாவட்டம்.

**அட்டவணை**

| 1 ம் பந்தி இடப்பெயர் | | 2 ம் பந்தி 8 அவுன்சிற்குக் கூடுதலான பாணின் விலை ஒவ்வொரு 16 அவுன்சும் | | | 3 ம் பந்தி 8 அவுன்ஸ் நிறையுள்ள பாணின் விலை ஒவ்வொரு 8 அவுன்சும் | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| பொலன்னறுவை காரியாதிகாரி பகுதி | .. | 0 | 42 | .. | 0 | 21 |
| புத்தல காரியாதிகாரி பகுதி | .. | 0 | 42 | .. | 0 | 21 |
| வெல்லவாய காரியாதிகாரி பகுதி | .. | 0 | 42 | .. | 0 | 21 |
| மடுல்ல காரியாதிகாரி பகுதி | .. | 0 | 43 | .. | 0 | 22 |
| விந்தனைப்பற்று காரியாதிகாரி பகுதி | .. | 0 | 43 | .. | 0 | 22 |
| தனமல்வில காரியாதிகாரி பகுதி | .. | 0 | 43 | .. | 0 | 22 |
| சியம்பலாந்துவ காரியாதிகாரி பகுதி | .. | 0 | 43 | .. | 0 | 22 |

உணவு விலைக் கட்டளை மொன/டி/2/1973. **கோதுமை மாவு**

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 4 ம் பிரிவோடு 3 (2) பிரிவுகளினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சந்திரரட்ன வியனாராச்சி ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1971 பெப்புருவரி 18 ந் திகதியிடப்பட்ட 14,946/8 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1971 பெப்புருவரி 25 ந் திகதிய மொன/டி/2/1971 இலக்கங் கொண்ட எனது உணவு விலைக்கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(ii) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 1 இன் 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே, ஒவ்வொரு 148 இருத்தலுக்கும் உள்ள கூடுதலான மொத்த விலையாக இருக்கவேண்டும் என்றும் விதிக்கின்றேன். இவ்விலைக்கு அதிகமாக, கோதுமைமா,, இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 1 இன் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குள் விற்றலாகாது.

(iii) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 2 ன் 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே ஒவ்வொரு இருத்தலுக்குமுள்ள கூடுதலான சில்லறை விலையாக உடன் நடைமுறைக்கு வரவேண்டும் என்றும் இவ்விலைக்கு அதிகமாக, கோதுமை மா அட்டவணை 2 இன் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குள் விற்றலாகாது என்றும் விதிக்கிறேன்.

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வித கோதுமை மாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 148 இருத்தல் நிறையைக் கொண்ட அல்லது அதற்குக் கூடிய தொகையையோ ஒரு முறையில் விற்பது மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ;

(ஆ) 148 நிகர இருத்தல் நிறைக்குக் குறைந்த கோதுமை மாவை உட்கொள்ளுவதற்காகவோ பாவனைக்காகவோ விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(இ) கோதுமை மா என்பது கோதுமை மாவுடன் கலந்த சோளம் மாவையும் குறிக்கும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) சோளம் மாவைத் தவிர்ந்த வேறு எப்பொருளுடனும் கலந்த கோதுமை மாவை விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) கோதுமை மாவையும், சோளம் மாவையும் கலந்து விற்குமிடத்து சோளம் மாவின் நிறை 10 வீதத்திற்கு கூடியதாக இருத்தலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடத்தில், குறிப்பிட்டுள்ள விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாவை சுற்றிக் கொடுக்கும் உறை, அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(viii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட கோதுமை மாவில் ஒரு சிறுபகுதியையும், இக்கட்டளையால் கோதுமை மாவிற்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளையும் ஒரு அங்குல அளவிற்கு குறையாத எண்களில் எழுதி வாங்குபவரால் நன்றாகப்பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(ix) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது நிறுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறைக்குச் சமமாகக் கருதப்படுமெனறும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(x) இக்கட்டளையால் கோதுமை மாவை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் அதனை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை நிறையில் ;

(இ) விற்ற தொகைக் கோதுமை மாவிற்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்வித விற்பனை என்பது அதாவது மொத்த விற்பனையா ? அல்லது சில்லறை விற்பனையா ?

1973 ஜனவரி 24 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு பொலன்னறுவைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

சந்திரரட்ன வியனாராச்சி,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
பொலன்னறுவை மாவட்டம்.

**அட்டவணை 1**

| 1 ம் பந்தி இடப்பரப்பு | | 2 ம் பந்தி கூடுதலான மொத்த விற்பனைக்கெனக் குறிக்கப்பட்டிருக்கும் விலை இவ்விலை 148 இருத்தல் கொண்ட கோதுமை மாவிற்கு ரூ. ச. |
|---|---|---|
| 1. பொலன்னறுவை காரியாதிகாரி பகுதி | .. | 57 17 |
| 2. புத்தல காரியாதிகாரி பகுதி .. | .. | 57 58 |
| 3. வெல்லவாய காரியாதிகாரி பகுதி | .. | 57 67 |
| 4. விந்தனைப்பற்றுக் காரியாதிகாரி பகுதி | .. | 57 91 |
| 5. மடுல்ல காரியாதிகாரி பகுதி .. | .. | 57 17 |
| 6. தனமல்வில காரியாதிகாரி பகுதி | .. | 57 58 |
| 7. சியம்பலாந்துவ காரியாதிகாரி பகுதி | .. | 57 17 |

அட்டவணை 2

| 1 ஆம் பந்தி இடப்பரப்பு | 2 ஆம் பந்தி ஒரு இருத்தல் கோதுமை மாவின் கூடுத லான சில்லறை விலை ரூ. ச. |
|---|---|
| **1.** மொனறுகலை காரியாதிகாரி பகுதி :— | |
| (அ) மொனறுகலை நகராட்சி மன்றப் பகுதி .. | 0 40 |
| (ஆ) கந்துகற கி.ம. பகுதியில் ஹிங்குறகடவ, அத்தலே வசமதவிர்ந்த ஏனைய பகுதிகள் .. | 0 40 |
| (இ) மொனறுகலை கி.ம. எல்லைக்குள் .. | 0 40 |
| (ஈ) ஹிங்குறகடவ, அத்தலே வசம பகுதிகள் .. | 0 42 |
| **2.** மதுல்ல காரியாதிகாரி பகுதி :— | |
| (அ) தம்பகல்ல கிராமாட்சி மன்ற வட்டாரத்தில் பொத்துலியெத்த வசம தவிர்ந்த பகுதி .. | 0 40 |
| (ஆ) பொத்துலியெத்த வசம .. .. | 0 42 |
| (இ) இங்கினியாகல, பதுலுவலே, தெலிவ வசமங்களது ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை வட்டாரம் .. .. .. | 0 41 |
| **3.** சியம்பலந்துவ காரியாதிகாரி பகுதி :— | |
| (அ) சியம்பலந்துவ வசம, வத்தேகம, எத்திமெலே வசமங்கள் நீங்கலான சியம்பலந்துவ கிராமாட்சி மன்ற வட்டாரம் .. .. | 0 40 |
| (ஆ) சியமபலந்துவ, வராகம, நாப்பே, வத்தேகம, எத்திமெலே வசமங்கள் .. .. | 0 41 |
| **4.** புத்தல காரியாதிகாரி பகுதி :— | |
| (அ) புத்தல கிராமாட்சி மன்ற வட்டாரம் .. | 0 41 |
| (ஆ) வெல்லவாயா கிராமாட்சி மன்ற வட்டாரம் .. | 0 40 |
| **5.** தனமல்வில்ல காரியாதிகாரி பகுதி :— | |
| (அ) சித்தரம்பலாத்த கிராமாட்சி மன்ற வட்டாரம் :— | |
| (i) சித்தரம் வசம .. .. | 0 42 |
| (ii) கம்பகமுவ, சூரியகூர, உடவளவை வசமங்கள் | 0 42 |
| (ஆ) கதிர்காமக் கிராமாட்சிமன்ற வட்டாரம் .. | 0 41 |
| **6.** வெல்லஸ்ஸ காரியாதிகாரி பகுதி :— | |
| (அ) நில்கலே வசம நீங்கலான பிபிலே கிராமாட்சி மன்ற வட்டாரம் .. .. | 0 41 |
| (ஆ) நில்கலே வசம .. .. | 0 42 |
| (இ) கொட்டகம கிராமாட்சி மன்ற வட்டாரம் .. | 0 42 |
| (ஈ) மதகம்பத்து கிராமாட்சி மன்ற வட்டாரம் .. | 0 41 |
| **7.** விந்தனைப்பற்று காரியாதிகாரி பகுதி .— | |
| (அ) விந்தனை வடக்குக் கிராமாட்சி மன்ற வட்டாரம்.. | 0 41 |
| (ஆ) கோவிகே, இலுகுல்லே வசமங்கள் நீங்கலான விந்தனைத் தெற்கு கிராமாட்சி மன்ற வட்டாரம்.. | 0 41 |
| (இ) கோவிகே, இலுகுல்லே வசமங்கள் .. | 0 42 |

குறிப்பு :—இந்த விலைகள் இப்பொருளை விற்கவேண்டிய விலைகளாகக் கணிக்கப்படவில்லை. இவைகள் ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைக்கு மேல் இவற்றை விற்கலாகாது.

(2) 148 நிகர இருத்தலுக்குக் குறைந்த அல்லது கூடிய தொகை கோதுமை மாவை மொத்தமாக விற்கும்பொழுது, 148 நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலையிலிருந்து விகிதசமப்படி கணக்கிட்டு படவேண்டும்.

உணவு விலைக்கட்டளை இல. மொன/D/3/1973

உப உணவுப் பொருட்கள்
(கூட்ட வேண்டிய நிச்சய விலை)

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (பந்தி 173) 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மொனறுகலை பரிபாலன, மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சந்திரரட்ன வியஞராச்சி ஆகிய நான், இக்கட்டளையால்—

(i) 1971 பெப்புருவரி 18 ந் திகதிய 14,946/8 இலக்க அதி விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1971 பெப்புருவரி 25 ந் திகதியிடப்பட்ட மொன/டி/5/1971 ஐக் கொண்ட விலைக்கட்டுப்பாட்டு கட்டளைகளை இப்போது தொடக்கம் எடுத்து விடுகின்றேன்.

(ii) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள 1 ம் அட்டவணையின் 3 ம் பந்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே 2 ம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் அட்டவணையின் 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட இடங்களில் 1 ம் பந்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருட்களின் அதற்குக் கூடிய விலைக்கு விற்கலாகாத மொத்த அந்தரின் இப்போது தொடக்கம் நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கின்றேன்.

(iii) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் 4 ம் பந்தியில் குறிக்கப்பட்ட தொகையைக் கூடிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட பொருட்களின் அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள்ள அல்லது மாவட்ட எல்லைக்குள் அதற்குக் கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக இப்போது தொடக்கம் நடைமுறையில் வரும்படி விதிக்கினறேன்.

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

